# சேர்க்கவா..... பிரிக்கவா........

பிழை எண் 4 (சேர்க்கவா,பிரிக்கவா) சொற்களை எழுதுவதில் ஏற்படுகிற பிழை.

ஒரு சொல்லும் இன்னொரு சொல்லும் இணைந்து புதிய சொல் உருவாகும்போது இரண்டு சொற்களையும் பிரித்து எழுதுவதா, சேர்த்து எழுதுவதா என்ற பிரச்சனை எழுகிறது.

சொற்களைப் பிரித்து எழுதினால் அது தவறான புரிதலுக்கு அடித்தளமாகிவிடும்.

அம்மா என்பதைப் பிரித்து எழுதினால் அம் மா - என்பது அந்த மா என்றாகிவிடும்.
அப்பா என்பதைப் பிரித்து எழுதினால் அப் பா - என்பது அந்தப் பா என்றாகிவிடும்.
அம்மான் என்பதைப் பிரித்து எழுதினால் அம் மான் - என்பது அந்த மான் என்றாகிவிடும்.
அவ்வாறு என்பதைப் பிரித்து எழுதினால் அவ் வாறு - என்பது அந்த வாறு என்றாகிவிடும்.
அம் மணப்பெண் வந்தாள் என்பதை அம்மணப் பெண் வந்தாள் என் எழுதலாகுமா ?

---

## சேர்த்து எழுதிடும் இடங்களை அறிந்து கொள்வோம்.,

1.முதல் சொல் ஓரசை, அடுத்த சொல் உயிரெழுத்தில் தொடங்க, இறுதிமெய் இரட்டிக்கும். சேர்த்து எழுதவும்.

கண் + அசைவு = கண்ணசைவு,

மண்ணாசை, மெய்யன்பு, கல்லடி, உள்ளறை,

2.முதல் சொல் ஓரெழுத்து, அடுத்த சொல் (க ச த ப) வில் தொடங்க வல்லெழுத்து மிகும். சேர்த்து எழுதவும்.

தீ + சுடர் = தீச்சுடர்,

மாக்கோலம், பூச்செடி, தீச்சட்டி, பூப்பந்து,

3.முதல் சொல்லின் இறுதி எழுத்து மெய்யெழுத்து, அடுத்து வருவது உயிரெழுத்து, சேர்த்து எழுதவும்.

தாய் + அன்பு = தாயன்பு,

உயிரோட்டம், குழலோசை, மண்ணாசை, கல்லடி, வில்லம்பு,

4.ஓரசைச் சொல்லில் உள்ள இறுதி எழுத்து ல், ள், ன் + சொல் இணைய ற், ட் ஆகும், சேர்த்து எழுதவும்.

பால் + சோறு = பாற்சோறு,

நெற்பயிர், ஆட்குறைப்பு, பொற்குடம்,

5.அம் ஏற்றுவரும் சொற்கள் சேர்த்து எழுதப்படுகின்றன.

அருகம்புல் (அருகு+அம்=அருகம்),

கம்பங்கூழ், தாழம்பூ, வேப்பங்கொட்டை, தென்னம்பாளை, பனங்கள்,

### 6.பெயர் + இடைச் சொல்

(பெயர்ச்சொல்லில் வேற்றுமை உருபு இல்லாத பொழுது இடைச் சொற்களைச் சேர்த்து எழுதவும்.

என் + கீழ் = என்கீழ்,

விழாகுறித்து, இதுபற்றி, கிளைமீது, ஆள்மூலம், கூரைமேல்

### 7.பெயர் + வினை

(பெயர்ச்சொல்லை வினைப்படுத்துகிற வினையைச் சேர்த்து எழுதவும்.

கைது + செய் = கைதுசெய்,

கவலைப்படு, பழக்கமாகு - (வினைப்படுத்தும் வினைகளுக்கு எ.கா = அடி, ஆக்கு, ஆகு, இடு, உறு, எடு, செய், படு, படுத்து, பண்ணு, பார், பிடி, புரி, பேசு, போடு, முடி, வகி)

### 8.வினையடி + பெயர்

(வினையடியைத் தொடர்ந்து வருகிற பெயர்ச்சொல் வினைத்தொகையாக இருந்தால் சேர்த்து எழுதவும்)

குடி + தண்ணீர் = குடிதண்ணீர்,

கொதிநீர், வளர்தொழில், வெடிபொருள்,

### 9.பெயர் + வினையடி + பெயர்

(வினையடியின் முன் பெயர்ச்சொல் வருகிறபோது அந்தப் பெயர்ச் சொல்லுடன் வினையடி இணைந்து வரும்.

கடல் + வாழ் + உயிரினங்கள் = கடல்வாழ் உயிரினங்கள்,

அரசுசார் நிறுவனம், பாசமிகு தம்பி, புலனறி உணர்வு

### 10.வினை + வினை

(இரண்டு வினைகள் இருந்தால் (முதன்மைவினை, துணைவினை) இரண்டையும் சேர்த்து எழுதவும்)

படித்து + இருக்கிறேன் = படித்திருக்கிறேன்,

சிரித்துக்கொண்டான், கொடுத்தாயிற்று, போய்த்தொலை, எடுத்துக்கொண்டுவிட்டேன், துண்டிக்கப்பட்டுவிட்டது, கிடைக்கப்பெற்றேன்,

(துணை வினைக்கு எடுத்துக்காட்டு = அடி, அருள், ஆக்கு, ஆகு, இடு, இரு, உறு, எடு, எழு, எறி, ஒழி, ஓங்கு, சுட்டு, காட்டு, காண்பி, கிட, குவி, கூடு, கொடு, கொள், சா, செய், தள்ளு, தா, திரி, தீர், தொலை, படு, படுத்து, பண்ணு, பார், பிடி, புரி, பெறு, பேசு, போ, போடு, முடி, வகி, வா, விடு, வை)

### 11.இரட்டைச் சொற்கள்

(மரபாக இணைந்து வரும் பெயர்ச்சொற்கள் உம் மறைந்து வரும்போது சேர்த்தே எழுதப்படும்)

செடிகொடி, இலைதழை, காய்கனி, கணக்குவழக்கு, இன்பதுன்பம், கைகால், தாய்தந்தை,

### 12.இரட்டித்து வரும் சொற்களையும் சேர்த்தே எழுதவேண்டும்

சிறுசிறு, திரும்பத்திரும்ப, முத்துமுத்தாக,

### 13.அடைஏற்று வரும் பெயர்ச்சொல்லை அடுத்து மற்றொரு பெயரோ வினையோ வந்தால்.,

இரு வழி = இருவழிப் பாதை,

பணத் திமிர் = பணத்திமிர் பிடித்த

குற்றச்சாட்டு = கொலைக்குற்றம் சாட்டு,

பெயரெடு = நல்லபெயர் எடு,

மணியோசை = ஆலயமணி ஓசை,

வேறிடம் = வேறு இடத்தில்,

வேறுசில = வேறு சிலவும், வேறுபல= வேறுபலவற்றை,

14.பொழுது என்ற சொல் போது என்ற சொல்லைப் போவே சேர்த்து எழுதவும்.

காலையில் எழுந்தபொழுது தலை வலித்தது.

15.பெயர்ச்சொல்லை வினைப்படுத்துகிற வகையில் எழுதும் பொழுது சேர்த்து எழுதவும்.

நீதிபதி தீர்ப்பளித்தார், (தீர்ப்பு), மக்கள் இவருக்கு ஆதரவளிப்பார்கள், (ஆதரவு)

16.அ, இ = சுட்டெழுத்து. சுட்டெழுத்தை அடுத்துவரும் சொல்லோடு சேர்த்து எழுதவும்

அ + காலத்தில் = அக்காலத்தில், அச்சமயம், அத்தகுதி, அவ்வூரில், அவ்வூர்,

இ + நேரம் = இந்நேரம், இக்கணமே, இச்செய்தியால், இவ்வூரில், இவ்வூர்,

# சேர்ப்பதும் பிரிப்பதும்,

## அளவு, அளவில், அளவுக்கு என்கிற சொல்

1அ. ஓர் எழுத்தாக உள்ள சொல்லுடன் இணையும் பொழுது சேர்த்து எழுதவும்,

கையளவு, உன்னளவில், மாரளவுக்கு,

1ஆ. பல எழுத்தாக உள்ள சொல்லுடன் இணையும் பொழுது பிரித்து எழுதவும்,

உடல் அளவு, கேட்ட அளவில், எடுத்த அளவுக்கு

---

## அல்ல என்ற சொல்

2அ. மறுத்தல் பொருளில் வராதபொழுது சேர்ந்து எழுதவும்.

கண்ணல்ல, அதைத் தந்துவிடு, அது ஒரு பொருட்டல்ல

2ஆ. மறுத்தல் பொருளில் வரும்பொழுது பிரித்து எழுதவும்.

இது வாக்குறுதி அல்ல,

பெரிய அணை அல்ல, என் கையெழுத்து அல்ல, மகள் அல்ல மறுமகள்.

---

## பெயரடை பெற்று வரும் சொற்கள்

3அ. ஓர் அசையாக இருந்தால் சேர்த்து எழுதப்படுகின்றன.

ஏழுலகு ( ஏழ் + உலகு ), (ஏழ் என்பது ஓர்அசை) (நேர்)

ஓராண்டு, காரிருள், நற்செயல், மாபெரும், மூவுலகு, வெண்தாடி

3ஆ. பெயரடை பல அசைகளாக இருந்தால் இடம் விட்டு எழுதவேண்டும்

அரிய + ஒற்றுமை = அரிய ஒற்றுமை, (அரிய என்பது இரண்டு அசை= அரி + ய) (நிரை)

இளம் எழுத்தாளர், கடும் எரிச்சல், கெட்ட பழக்கம், சிறிய வீடு, நல்ல பெயர், புதிய உலகம்,

---

## தான் என்ற சொல்

4அ. (பொருள் அழுத்தம் தருவதற்குப் பயன்படுத்தும் பொழுது சேர்த்து எழுதவும்)

அவன்தான் என்னை அடித்தான், அவனைத்தான் கேட்க வேண்டும், அவனையேதான் பார்த்துக் கொண்டிருந்தேன், சொல்லத்தான் வேண்டும்,

4ஆ. (அவள், அவள், அது ஆகியவற்றுக்கு மாற்றுப் பெயராக வரும்போது இடம் விட்டு எழுதவும்)

தான் சம்பாதித்துச் சேர்த்த பணம் என்று அவன் கூறினான்,

தான் ஈன்ற கன்றை பசு நக்கிக் கொடுத்தது,

---

### அற்ற என்ற சொல்

5அ. பெயர்ச்சொல்லுடன் இதைச் சேர்த்து எழுதவும்

**சிந்தனையற்ற பேச்சு, மனமற்ற மலர், கவலையற்ற வாழ்க்கை**

5ஆ. பெயர்ச்சொல்லோடு அடை சேரும் பொழுது பிரித்து எழுதவும்.

**சுயசிந்தனை அற்ற ஒருவர், நறுமணம் அற்ற மலர்**

---

## பிரித்து எழுதிட..,

### 1.பெயர் + பெயர் (உடம்படுமெய்)

உயிரெழுத்தில் முடியும் சொற்களின் பின் உயிரெழுத்தில் தொடங்கினால் ய், வ். தவிர்க்கப்பட்டு இடம் விட்டு எழுதவும்.

**அணு + உலை = அணு உலை,**

**கொசு ஒழிப்பு, இறுதி ஆண்டு, ஊராட்சி ஒன்றியம், விண்வெளி ஓடம், கொண்டை ஊசி, சோடா உப்பு, பச்சை உடம்பு,**

### 2.பெயர்ச் சொல்லில்

வேற்றுமை உருபு இருந்தால் இடைச் சொற்களை இடம் விட்டு எழுதவும்

**பெட்டி + இன் + கீழ் = பெட்டியின் கீழ், ( இன் - வேற்றுமை உருபு, கீழ் - இடைச் சொல்)**

**விழாவைக் குறித்து, இதைப் பற்றி, கிளையின் மீது, ஆளின் மூலம், கூரைக்கு மேல்**

### 3.இடைச்சொல் ஏற்கும் சொற்கள்

ஆ, ஏ, ஓ, உம், ஆவது - இடைச்சொற்கள் வந்தால் சொல்லைப் பிரித்து எழுதவும்.

**முடித்துவிட்டான் = முடித்தா விட்டான்,** (முடித்து என்கிற சொல் ஆ என்கிற இடைச்சொல் பெற பிரிந்தது)

**வந்துவிட்டது = வந்தா விட்டது,**

**போய்த்தொலைந்தான் = போயே தொலைந்தான்,**

**பறந்துபோகும் = பறந்தா போகும்,**

**அழவைத்தான் = அழவும் வைத்தான்,**

**நகைநட்டு = நகையோ நட்டோ,**

**கணக்குவழக்கு = கணக்காவது வழக்காவது,**

### 4. வேண்டும், வேண்டாம் சொற்கள் வரும் பொழுது பிரித்து எழுதவும்

**நன்கு படிக்க வேண்டும், தண்ணீர் குடிக்க வேண்டும், உரிய பணம் வேண்டும்.**

**கடன் வாங்க வேண்டாம், தீயவை செய்ய வேண்டாம், தீயவரோடு பழக வேண்டாம்.**

### 5. முடியும், முடியாது இடம் விட்டு எழுத வேண்டும்.

**என்னால் செய்ய முடியும், நாளை வர முடியாது**

### 6. நடுவில், நடுவே சொற்களுக்குப் பிறகு இடம் விட்டு எழுத வேண்டும்.

**இரண்டுக்கும் நடுவில் நில். ஊரில் நடுவே சந்தை உள்ளது.**

ஒரு சொல் மற்றொரு சொல்லோடு இணையும்பொழுது, இரண்டுக்கும் இடையில் இடைவெளி விட்டு எழுதுவதா, இணைத்து எழுதுவதா என்ற பிரச்சனைக்கு இதுவரை ஒரு சில எடுத்துக்காட்டுகளைப் பார்த்தோம். தொடர்கள் எழுதும் பொழுது இதை நினைவில் வைத்து இடம் விடவும்.